




## சென்னையில் ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் பங்கேற்ற கருத்தரங்கம்:

# தமிழ் மக்கள் தெளிவாகச் சிந்திக்கும் திறன் கொண்டவர்கள்- பாசிச சக்திகளை அடையாளம் கண்டு தள்ளி வைப்பார்கள்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்தரங்கில் பங்கேற்று உரை!

சென்னை,பிப்.25 –

**சென்னை, ஐ.டி.சி. கிராண்ட் சோழா ஹோட்டலில் சி.என்.என். – நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் பங்கேற்ற கருத்தரங்கில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

அரசியல் ஆர்வலர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள், ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. மாநிலத்தில் அரசியல் வெப்பம் நாளுக்கு நாள் உயர்ந்து வரும் நிலையில், சி.என்.என். (CNN) இந்தக் கருத்தரங்கை நடத்துவதன் மூலம் அந்த வெப்பத்தின் தன்மையை மேலும் கூட்டியிருக்கிறது.

பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த பேச்சாளர்கள், முக்கியமான தலைப்புகள் குறித்து, தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட இயக்க அரசியல் மற்றும் இளைஞர்கள் குறித்து, என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### இளைஞர்களின் முன்னேற்றம்

இன்றைய இளம் தலைமுறையினர் தெளிவாக உள்ளனர். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவாகவும், உறுதியாகவும் தீர்வு வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்தச் சூழலில், திராவிட அரசியல் இதற்கு முன்பை விட அதிகமாகப் பொருத்தமானதாக உள்ளது. 76 ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர்களால் தொடங்கப்பட்ட தி.மு.க., இன்றும் இளைஞர்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

1967-ஆம் ஆண்டு முதல்...

இதன் மையமாக, திராவிட அரசியல் ஒவ்வொரு இளைஞருக்கும் கூறுகிறது:

உங்கள் எதிர்காலத்தை, உங்கள் திறமைதான் தீர்மானிக்கும்; உங்கள் சமூகப் பின்னணி அல்ல.1967-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டு மக்கள் திராவிட மாடலை அனுபவித்து வருகின்றனர். நமது திராவிட மாடல் முடிவுகளைத் தந்துள்ளது. அதனால்தான், இளம் தலைமுறையினர் முழு மனதுடன் நம்மை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன், நாடு முழுவதும் `குஜராத் மாடல்' என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. அதற்கு மிகப்பெரிய புகழ் இருந்தது, பின்னர் அது வெறும் மாயை என்று நாடு உணர்ந்தது. ஆனால், தமிழ்நாடு குஜராத் மாடலின் பொய்யான கூற்றுகளை, முதல் நாள் முதற்கொண்டே புரிந்துகொண்டு, அதைத் தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

### வேறுபாட்டை அறிந்தவர்கள்

நமது மக்கள் உண்மையான வளர்ச்சிக்கும் வெற்று வாக்குறுதிகளுக்குமான வேறுபாட்டை அறிந்தவர்கள். தமிழ்நாட்டு மக்கள் ஏன் பல ஆண்டுகளாக மதவாத சக்திகள் பரப்பிய பொய் குற்றச்சாட்டுகள் இருந்தும், தி.மு.க.வைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர் என்று தெரியுமா? ஏனெனில், அவர்கள் திராவிட இயக்கத்தின் சாரத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர் - நாட்டின் பெரும்பகுதி புரிந்து கொள்ளாத ஒன்று. நேர்மையாகச் சொன்னால், பலர் உண்மையைப் பார்க்க விரும்புவதில்லை என்று கூடச் சொல்வேன்.

ஒரு எளிய உதாரணம் தருகிறேன். இங்கு இருப்பவர்களில் சிலர் நினைப்பீர்கள் - தி.மு.க. இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பது வெறும் அரசியல் லாபத்துக்காக என்று. ஆனால், அது உண்மையல்ல. தமிழ்நாட்டின் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டம், தி.மு.க. உருவாவதற்கு ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பே. 1930 களின் இறுதியில் தொடங்கியது. நூற்றுக்கணக்கான தமிழறிஞர்களும், லட்சக்கணக்கான ஆர்வலர்களும் தெருக்களில் இறங்கி எதிர்த்தனர். நமது தலைவர் தந்தை பெரியார் அந்த இயக்கத்தை முன்னெடுத்து தீவிரமாகப் பங்காற்றினார்.

### வரலாற்றுப் போராட்டம்

1965-இல் கூட, கல்லூரி மாணவர்களே மாநிலம் முழுவதும் இந்தி திணிப்புக்கு எதிரான பெரும் போராட்டங்களை, முன்னின்று நடத்தினர். இளைஞர்கள் ஆயுதப் படைகளின் அடக்குமுறையை எதிர்கொண்டு, உயிர்களைத் தியாகம் செய்தனர். நமது மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில், தி.மு.க., அந்த வரலாற்றுப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கிறது. இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ளாமல், பிரதமர் நரேந்திர மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் தங்களை தமிழ்மொழியின் காதலர்கள் என்று சித்தரித்துக் கொள்கின்றனர்.

தேர்தல் காலங்களில் மட்டுமே தமிழ்நாடு வருபவர்கள், தமிழில் பேசாததற்கு வருத்தம் தெரிவிப்பது எனக்குப் புரியவில்லை. ஒரு மொழி தெரியாததற்கு ஏன் வருத்தப்பட வேண்டும்? உண்மையில் மக்கள் அறிய விரும்புவது தமிழ்நாட்டிற்கு நீங்கள் என்ன செய்தீர்கள், உங்கள் உத்தரவாதங்கள் என்ன, என்பதுதான். அவர்கள் குஜராத்தில் ,பேசலாம் – அது அவர்களின் தாய்மொழி, அதை நாங்கள் மதிக்கிறோம்.

நாங்கள் கவனிப்பது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மட்டுமே – போலியான உணர்ச்சிகளை அல்ல. சமீபத்திய ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாட்டிற்கு எந்த முக்கியமான திட்டமும் அறிவிக்கப்படவில்லை. ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு உரிய நிதியைத் தடுத்து வைத்துள்ளது – கல்விக்கான ஒதுக்கீடுகள் உட்பட.




### நாட்டிலேயே முன்னணி

பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் செயற்கையான நிதி நெருக்கடியை உருவாக்க முயல்கிறது. தமிழ்நாட்டு மக்களால் தொடர்ந்து நிராகரிக்கப்படுவதால் ,ஏற்பட்ட விரக்தியே இதற்குக் காரணம். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இப்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான தி.மு.க. அரசுகள், மக்களின் நலனுக்கும் மாநில வளர்ச்சிக்கும் என்ன செய்துள்ளன என்பதை அவர்கள் பார்க்கத் தவறுகின்றனர். திராவிட மாடல் பின்தங்கிய பிரிவினரை கல்வி மூலம் அதிகாரப்படுத்தி உயர்த்துகிறது.

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கல்வியை எடுத்துச் செல்கிறது.நமது திராவிட மாடல் அரசு, தினமும் சுமார் 22 லட்சம் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குகிறது. இது வருகைப் பதிவை அதிகரித்து, பள்ளி இடைநிற்றலைக் குறைத்துள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களை சர்வதேச சுற்றுப்பயணங்களுக்கு அழைத்துச் செல்கிறோம் – உலக அனுபவம் அளிக்க. தமிழ்நாடு மொத்த சேர்க்கை விகிதத்தில் (Gross Enrolment Ratio) நாட்டில் முன்னணியில் உள்ளது.

மாநிலத்தில் பள்ளி முடிக்கும் மாணவர்களில், சுமார் 50 சதவிகிதம் பேர் கல்லூரிக்குச் செல்கின்றனர்.ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2035-ஆம் ஆண்டுக்குள் 50% ஜி.இ.ஆர். (GER) இலக்கு வைத்துள்ளது. தமிழ்நாடு அதை ஏற்கனவே அடைந்துவிட்டது. ஒன்றிய அரசு திட்டமிட்டதை விட, பத்து ஆண்டுகள் முன்பே, அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்வி தொடர ஊக்குவிக்க திட்டமிட்டு செயல்படுத்தியிருக்கிறது.

### திராவிட இயக்க அரசியல்

`புதுமைப்பெண்' மற்றும் `தமிழ் புதல்வன்' திட்டங்களின் கீழ் சுமார் 13 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு தலா 1,000 ரூபாய் மாதாந்திர கல்வி உதவி வழங்குகிறோம்.சுமார் 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப்கள் வழங்கப்பட்டுள்ளன – தொழில்நுட்ப ரீதியாக சிறந்தவை. ஆறு மாதங்களுக்கு பெர்ப்ளெக்சிட்டி ஏ.ஐ. (Perplexity AI) கருவிக்கு இலவச அணுகல் வழங்கியுள்ளோம். இது திராவிட இயக்க அரசியல் எப்போதும் கல்வியைக் குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தே வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

நமது இலக்கு, மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாணவரும் ஏ.ஐ. (AI) யுகத்தில் வெற்றி பெற அதிகாரம் பெற வேண்டும்.சமீபத்தில், நியூ டெல்லியில் நடந்த ஏ.ஐ (AI) உச்சி மாநாட்டில் நடந்ததை அனைவரும் பார்த்தோம். தமிழ்நாட்டிற்கு செயற்கை நுண்ணறிவு என்பது மேடை அலங்காரத்துக்காக நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் மட்டும் அல்ல. மாறாக, இளைஞர்களுக்கு தரமான கல்வியை அளிப்பதில், உறுதியாக உள்ளது.

நாங்கள் பொய் கூற்றுகளால் புகழ் தேடுவதில்லை. உண்மையான திறமையை உருவாக்குகிறோம். திராவிட இயக்க அரசியல் முதல் தலைமுறை கற்பவர்களை முதல் தலைமுறை தலைவர்களாக மாற்றுகிறது. நமது மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு கொண்ட தலைமைத்துவதால், தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி உறுதியாக நகர்கிறது.

### அரசியல்மயமாகும் இளைஞர்கள்

இந்த நேரத்தில், தி.மு.க. இளைஞர் அணி செயலாளராக, தமிழ்நாட்டில் இளைஞர்களை அரசியல்மயமாக்குவதற்கு நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை எடுத்துரைக்க விரும்புகிறேன்.234 தொகுதிகளிலும் திராவிட மாடல் பயிலரங்குகளை நடத்தினோம்.மாநிலம் முழுவதும் கலைஞர் நூலகங்களைத் திறந்து வைத்து வருகிறோம்.

இளைஞர் அணிக்குச் சொந்தமாக முத்தமிழறிஞர் பதிப்பகம் உள்ளது. திராவிட இயக்க வரலாற்றை, இளைஞர்களுக்கு கற்பிக்கும் கொள்கை சார்ந்த நூல்களை அது வெளியிடுகிறது. இது அதிக இளைஞர்களை ஈர்ப்பதற்கு மட்டுமல்ல, அவர்களை கொள்கை ரீதியாக உறுதியானவர்களாக ஆக்குவதற்காகவே செய்கிறோம்.

திராவிட இயக்கம், கல்வி உரிமை – சமத்துவம்– சுயமரியாதைக்காகப் போராடத் தொடங்கியது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிடம் அவர்களை எதிர்க்கிறது என சிலர் தவறாக நினைக்கின்றனர். அது உண்மையல்ல. சமத்துவத்திற்கு எதிராக நிற்பவர்களை, எதிர்ப்பதே நமது கொள்கை.

முன்னேற்றத்தின் வெற்றிகரமான மாடல்களில் இருந்து கற்றுக்கொள்ள, தமிழ்நாடு, எப்போதும் தயாராக உள்ளது. ஆனால், தோல்வியடைந்த மாடல்களின் பிற்போக்குக் கருத்துகளை ஏன் ஏற்க வேண்டும்? பெரியார், அண்ணா, கலைஞர் நமக்கு கற்பித்தது. உரிமைகளைப் பாதுகாத்து, மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்குவது. அதுவே திராவிட மாடலின் சாரம்.

நமது சமூகநீதிக் கொள்கைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக, தமிழ்நாடு பல்வேறு அம்சங்களில் நாட்டில் முதலிடம் பிடித்துள்ளது. தமிழ்நாடு 11.19% இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது, இது தேசிய சராசரியைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு. நமது உற்பத்தித் துறை 14.74% வளர்ச்சி கண்டுள்ளது இது தேசிய சராசரியை (4.5%) விட மூன்று மடங்கு.

இந்தியாவின் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களில் சுமார் 43% பேர் தமிழ்நாட்டில் உள்ளனர். எனவே, மோடியின் இரட்டை எஞ்சின் தமிழ்நாட்டை ஒரு அங்குலம் கூட நகர்த்தாது . அவர்களிடம் டப்பாவான எஞ்சினும் அதி.மு.க. போன்ற பஞ்சர் ஆன டயர்கள் மட்டுமே உள்ளன.

### தெளிவாக சிந்திக்கும் திறன்

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகள் ஈ.டி. (ED), ஐ.டி (IT) வழக்குகளை எதிர்கொள்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். பா.ஜ.க. வழக்குகள் மூலம் அச்சுறுத்தி அவர்களை வரிசையில் நிறுத்தியுள்ளது. தி.மு.க மட்டுமே பா.ஜ.க.வின் அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் பயப்படவில்லை.தமிழ்நாட்டு மக்கள் இந்த உண்மையை தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

தமிழ் மக்கள் தெளிவாக சிந்திக்கும் திறன் கொண்டவர்கள்.பாசிச சக்திகளை அடையாளம் கண்டு தள்ளி வைப்பார்கள். வரும் சட்டமன்றத் தேர்தலில், டெல்லியில் இருந்து வரும் இந்த பாசிசவாதிகளை மீண்டும் தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பார்கள் என நம்புகிறேன். நமது இளைஞர்களுக்குப் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்ய, சமயவாத சக்திகளை எதிர்த்து, சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்க வேண்டும். இந்தப் போராட்டத்தில் நமது முதலமைச்சர் இந்தியாவுக்கு வழிகாட்டுகிறார். நாங்கள் அச்சமடைய மாட்டோம், ஒருபோதும் சரணடைய மாட்டோம். தமிழ்நாட்டைப் பாதுகாக்க, எந்தத் தியாகமும் செய்யத் தயாராக உள்ளோம் . பா.ஜ.க. எவ்வளவு முயன்றாலும், இங்கு வெற்றி பெற முடியாது.

நமது தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக ஆவார்.திராவிட மாடல் 2.0 அரசின் கீழ், தமிழ்நாடு மேலும் முன்னேறும்.அனைவருக்கும் நன்றி. என்னை இங்கு அழைத்த சி.என்.என். (CNN) நிறுவனத்துக்கு மீண்டும் நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

## கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில்!

**``எங்கள் தலைவர், கூட்டணிக் கட்சிகளை எப்போதும் அரவணைத்துச் செல்வார். இதுதான் எங்கள் வெற்றிக்கு மிக முக்கியமான காரணம்!"**

**கேள்வி பதில்:** கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றிய பின், நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்துப் பேசினார். அதன் விவரம் வருமாறு:

**கேள்வி :** கடந்த 50 ஆண்டுகளாக இந்த மாநிலத்தின் அரசியலில் தி.மு.க எதிர் அ.தி.மு.க, அ.தி.மு.க எதிர் தி.மு.க என்றுதான் இருந்து வருகிறது. இந்தத் தேர்தலும் அப்படித்தான் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**துணை முதலமைச்சர் :** அதைத் தமிழ்நாட்டு மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**கேள்வி:** உங்களது கருத்து என்ன? நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**துணை முதலமைச்சர்:** மக்கள் தி.மு.க. பக்கம் நிற்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். புதியவர்கள் வந்து கொண்டேதான் இருப்பார்கள், அவர்களுக்கான இடம் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் மிகவும் தெளிவானவர்கள், நல்ல முடிவு எடுப்பார்கள்.

**கேள்வி:** நீங்கள் 200 இடங்களுக்கு மேல் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்று சொல்லி வருகிறீர்கள், எதை வைத்து இதை கணக்கிடுகிறீர்கள்?

**துணை முதலமைச்சர்** : சென்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 இடங்களுக்குப் போட்டியிட்டு, 39 இடங்களிலும் தமிழ்நாட்டு மக்கள் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அதாவது எங்களது தலைவர் தலைமையிலான அரசுக்கு மிகப் பெரிய வெற்றியை அளித்தார்கள்.

அந்தக் கணக்கை எடுத்துப் பார்த்தாலே, 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம். மேலும், எங்கள் தலைவர், ``வெல்வோம் 200, படைப்போம் வரலாறு" என்ற இலக்கை எங்களுக்குக் கொடுத்துள்ளார். களத்தில், நாங்கள் தீவிரமாக செயல்பட்டு, அந்த இலக்கை அடைவதுடன், அதற்கு மேல் வெற்றிபெற ஆச்சரியப்படுவதற்கில்லை. எங்கள் முதலமைச்சராகட்டும் அல்லது எங்களது அடுத்த கட்டத் தலைவர்களாகட்டும், எப்போதும் மக்களோடு மக்களாக இருப்பவர்கள்.

இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றிலேயே எந்த முதலமைச்சரும் இவ்வளவு தூரம் மக்களைச் சந்தித்தார்களா என்று எண்ணிப்பாருங்கள். எனக்குத் தெரிந்து கிடையாது. மக்களோடு மக்களாக இருக்கிறோம்.

இன்றும்கூட எங்களது முதலமைச்சர் இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, தனது தொகுதிக்குச் சென்று மாலை வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். நான் தொடர்ந்து மக்களோடுதான் பழகிக்கொண்டிருக்கிறேன், அவர்களின் வரவேற்பைப் பார்க்கும்போது, நிச்சயமாக 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்ற உறுதி எனக்கு இருக்கிறது.

**கேள்வி:** பா.ஜ.க. காலூன்றும் என்று நினைக்கிறீர்களா? ஏனென்றால், பிரதமர், உள்துறை அமைச்சர் எனப் பலர் பிரச்சாரம் செய்யத் திட்டமிட்டு வருகிறார்கள். அவர்களுக்கு உங்கள் செய்தி என்ன?

**துணை முதலமைச்சர் :** எங்கள் முதலமைச்சர் சொன்னது போல, மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வர வேண்டும், வருவதால், மக்களுக்கு விழிப்புணர்வு மேலும் அதிகமாகும். அவர்கள் வருகிறார்களே தவிர, தமிழகத்துக்கு எந்த நிதியோ, திட்டமோ தருவதில்லை. கல்வி நிதி, மெட்ரோ ரயில் திட்டம், ஜல் ஜீவன் திட்டம், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் போன்றவற்றுக்கு அவர்கள் நிதி தருவதில்லை. அவர்கள் வந்து பேசும்போது, நாங்கள் பேசுவதைவிட மக்களிடம் இன்னும் அதிகமாகச் சென்றடையும். தமிழ்நாட்டு மக்கள் மிகவும் தெளிவானவர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**கேள்வி :** திராவிட மாடல் என்பது, யாருக்கும் எதிரானது அல்ல, இந்திக்கு எதிரானது அல்ல என்று நீங்கள் கூறினீர்கள். ஆனால், தமிழகத்துக்கு வெளியே ஏன் இப்படி ஒரு தவறான புரிதல் இருக்கிறது?

**துணை முதலமைச்சர் :** அந்தத் தவறான புரிதலை உருவாக்குவது எங்களுக்கு எதிராக அரசியல் செய்பவர்கள்தான். திராவிடச் சிந்தனைக்கு எதிராக இருப்பவர்கள் எங்கள்மீது ஒரு வெறுப்புப் பிரச்சாரத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காக, இதைச் செய்கிறார்கள். அதில் சிலநேரம் அவர்கள் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். உண்மை ஒருநாள் நிச்சயமாக வெளிவரும்.

**கேள்வி:** இங்கிருந்து தொழில்கள் வெளியேறி வேறு மாநிலத்துக்குச் செல்வதாக பா.ஜ.க கூறுகிறது. நீங்கள் அது அரசியல் காரணம் என்கிறீர்கள், அவர்கள் உங்கள் தொழில் கொள்கை சரியில்லை என்கிறார்கள்.

**துணை முதலமைச்சர் :** இதற்கு எங்கள் தொழில்துறை அமைச்சர் ஏற்கெனவே பதிலளித்துள்ளார். தமிழ்நாடு எல்லா வகையிலும், பரவலான வளர்ச்சி பெற வேண்டும் என்று எங்கள் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருகிறார். அதற்காகத் தொழில் துறை இங்கு வருவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை எங்களது அரசு செய்துகொண்டிருக்கிறது.

**கேள்வி:** மகளிருக்கு 5,000 ரூபாய் வழங்கும் திட்டத்தை, நீங்கள் தேர்தலுக்காக மக்களுக்குக் கொடுக்கும் லஞ்சம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

**துணை முதலமைச்சர் :** இதற்கு முதலமைச்சர் ஏற்கெனவே பதிலளித்துள்ளார். பிப்ரவரி 13-ம் தேதி முதலமைச்சர் ஒரு மிகப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தார். இதைத் தடை செய்ய வேண்டும் என்று வேறு மாநிலங்கள் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளன. இதற்காகத்தான் முதலமைச்சர் மூன்று மாதத்துக்குத் தேவையான நிதியைக் கொடுத்துள்ளார். எங்கள் தாய்மார்கள் மிகவும் விவரமானவர்கள். 7 மணிக்கு தலைவர் 5,000 ரூபாயை வங்கியில் மகளிருக்கு செலுத்துகிறார். 9 மணிக்கெல்லாம் மக்கள் அதை எடுத்துவிட்டார்கள். ஏனென்றால், அந்தத் தொகையை வங்கியில் சொல்லி நிறுத்திவிடுவார்கள் என்று பணத்தை வங்கியில் இருந்து எடுத்துவிட்டார்கள். தி.மு.க. மீது மக்களுக்கு அந்த அளவு நம்பிக்கை இருக்கிறது. பா.ஜ.க மீது அந்தளவுக்கு அவநம்பிக்கை இருக்கிறது.

**கேள்வி:** காங்கிரஸ் தலைவர் மணிசங்கர் அய்யர், திரு. ஸ்டாலின் இந்தியா கூட்டணியின் தலைவராக வர வேண்டும் என்று கூறியுள்ளார். அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

**துணை முதலமைச்சர் :** எங்களது தலைவர் எவ்வளவு தீவிரமாக ஒன்றிய பா.ஜ.க. பாசிச சக்திகளை எதிர்த்து அரசியல் செய்கிறார் என்பதற்கு, இது ஒரு சான்று. எங்களது கூட்டணிக் கட்சி எங்களைப் பாராட்டுவது எங்களுக்கு மகிழ்ச்சிதான். இருந்தாலும், எங்கள் தலைவர்தான் இதற்கான முடிவை எடுப்பார்.

**கேள்வி:** கூட்டணிக் கட்சிகளுடன் இப்போது உறவு எப்படி இருக்கிறது?

**துணை முதலமைச்சர் :** எங்கள் தலைவர், தி.மு.க-வின் தலைவராக பொறுப்பேற்ற பிறகு, சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளார். அதற்கு முக்கிய காரணம் கூட்டணிக் கட்சிகளை அவர் மிகவும் திருப்திப்படுத்துவார். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஒரு தலைவர் அவர். இதுதான் எங்கள் வெற்றிக்கு மிக முக்கியமான காரணம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.